புதுச்சேரி வீட்டுவசதி வாரியம்
புதுச்சேரி – 5.

கோ.எண்.285/புவீவா/நி.பி.//2022-23 தேதி:09.06.2023

**E-Auction id: 2023_PY_686**

புதுச்சேரி வீட்டுவசதி வாரிய திட்டப்பகுதிகளில் அமைந்துள்ள கடைகள் / அலுவலக வளாகம் / குடியிருப்பு -களை (as is where is condition) பதினோரு மாத காலத்திற்கு மாத வாடகைக்கு நடத்துவதற்கு உரிமம் பெற மின்னணு இணையதள ஏல அறிவிப்பு

---

புதுச்சேரி வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான புதுச்சேரி வீட்டுவசதி வாரிய திட்டப்பகுதிகளில் அமைந்துள்ள கடைகள் / அலுவலக வளாகம் / குடியிருப்பு -களை பதினோரு மாத காலத்திற்கு நடத்துவதற்கு உரிமம் பெற மின்னணு ஏலமுறையில் https://eauction.gov.in என்ற இணையதளம் மூலம் 05.07.2023 புதன்கிழமை காலை 10.00 மணிமுதல் மாலை 06.00 மணிவரை மற்றும் 06.07.2023 வியாழக்கிழமை காலை 10.00 மணிமுதல் மாலை 06.00 மணிவரை ஏலம் நடைபெற உள்ளது. இதன் விபரங்கள், விண்ணப்பப்படிவம் போன்றவற்றை http://py.gov.in மற்றும் https://eauction.gov.in என்ற இணையதளம் மூலம் 10.06.2023 காலை 10.00 மணிமுதல் பதிவிறக்கம் (download) செய்துகொள்ளலாம் /அறிந்துகொள்ளலாம்.

செயலர்
புதுச்சேரி வீட்டுவசதி வாரியம்

புதுச்சேரி வீட்டுவசதி வாரியம்
புதுச்சேரி – 5.

கோ.எண்.285/புவீவா/நி.பி.//2022-23 தேதி:

## மின்னணு ஏலத்திற்கான விண்ணப்பப்படிவம்

புதுச்சேரி வீட்டுவசதி வாரியத்தின் திட்டப்பகுதிகளில் அமைந்துள்ள வாரியத்திற்குச் சொந்தமான கடைகள் / அலுவலக வளாகங்கள்/குடியிருப்பு-களை (as is where is condition) பதினோரு மாத காலத்திற்கு மாத வாடகைக்கு நடத்துவதற்கு மின்னணு ஏலம் கோருவதற்கான விண்ணப்பப்படிவம்.

****

| | |
|---|---|
| 1. விண்ணப்பதாரரின் பெயர் : | Passportsize Photo |
| 2. தந்தை/கணவர் பெயர் : | |
| 3. முகவரி : | |

4. ஆதார் அடையாள எண் :

5. கைப்பேசி எண். :

6. விண்ணப்பிக்கும் கடை/ அலுவலக வளாகம் / குடியிருப்பு விவரம்:
   (a) கடை எண்/அலுவலக வளாகம் / குடியிருப்பு எண்.:
   (b) திடடப்பகுதி:
   (c) பிராந்தியம்: புதுச்சேரி / காரைக்கால்:

7. வாரியத்தால் நிர்ணயிக்கபட்டுள்ள: ரூ
   குறைந்தபட்ச ஏலத்தொகை

8. டேவணித்தொகையின் (EMD) விபரம்: ரூ
   வங்கியின் பெயர்:
   வரைவோலை எண் மற்றும் தேதி:

உரிமம் பெறுவதற்கான வரையறுக்கப்பட்டுள்ள நிபந்தனை விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள் அனைத்தையும் படித்து தெரிந்து கொண்டு அவைகளுக்கு கட்டுப்பட்டு இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்பிக்கிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்

இடம்:
தேதி:
இணைப்பு:
1) விண்ணப்பப்படிவத்திற்கான கேட்புவரைவோலை ரூ.525/-
2) செலுத்தப்படவேண்டிய டேவணித்தொகைக்கான வரைவோலை
3) ஆதார் அடையாள அட்டையின் நகல்
4) வருமானவரி அடையாள அட்டையின் (PAN Card) நகல்

புதுச்சேரி வீட்டுவசதி வாரியம்
புதுச்சேரி – 5.

கோ.எண்.285/புவீவா/நி.பி.//2022-23 தேதி:09.06.2023

மின்னணு ஏல நிபந்தனைகள் / விதிமுறைகள்

புதுச்சேரி வீட்டுவசதி வாரியத்தின் திட்டப்பகுதிகளிலுள்ள வாரியத்திற்குச் சொந்தமான கடைகள் / அலுவலக வளாகங்கள்/குடியிருப்பு (as is where is condition) பதினோரு மாத காலத்திற்கு மாத வாடகைக்கு நடத்துவதற்கு மின்னணு ஏலம் கோருவதற்கான நிபந்தனைகள்.

****

புதுச்சேரி வீட்டுவசதி வாரியத்தின் திட்டப்பகுதிகளிலுள்ள வாரியத்திற்குச் சொந்தமான கடைகள் / அலுவலக வளாகங்கள் (as is where is condition) பதினோரு மாத காலத்திற்கு வாடகைக்கு நடத்துவதற்கான உரிமம் வழங்குவதற்காக "https://eauction.gov.in" என்ற இணையதளம் மூலம் மின்னணு ஏலம் நடைபெறவுள்ளது. அவற்றின் விபரம் பின்வருமாறு:-

| வ. எண் | கடை / அலுவலக வளாகத்தின் விபரம் | தளம் | பரப்பளவு சதுர மீட்டர் | குறைந்தபட்ச ஏலத்தொகை ஒரு மாதத்திற்கு | செலுத்தப்பட வேண்டிய டேவணித் தொகை | ஏலம் நடைபெறும் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தேதி | நேரம் |
| 1 | கடை எண்.7 விடுதலை நகர் முதலியார்பேட்டை புதுச்சேரி | தரை | 11.52 | 6500 | 13000 | 05.07.23 புதன் கிழமை | 10.00 A.M. முதல் 11.00 A.M. |
| 2 | கடை எண்.8 விடுதலை நகர் முதலியார்பேட்டை புதுச்சேரி | தரை | 11.38 | 6500 | 13000 | 05.07.23 புதன் கிழமை | 11.00 A.M. முதல் 12.00 Noon |
| 3 | கடை எண்.2, பூங்காவிற்கு தெற்கு லாஸ்பேட்டை புதுச்சேரி | தரை | 07.38 | 4000 | 8000 | 05.07.23 புதன் கிழமை | 12.00 Noon முதல் 01.00 P.M. |
| 4 | கடை எண்.8 பூங்காவிற்கு தெற்கு லாஸ்பேட்டை புதுச்சேரி | முதல் | 12.59 | 5000 | 10000 | 05.07.23 புதன் கிழமை | 01.00 P.M.. முதல் 02.00 P.M. |
| 5 | கடை எண்.9 பூங்காவிற்கு தெற்கு லாஸ்பேட்டை புதுச்சேரி | முதல் | 17.48 | 6500 | 13000 | 05.07.23 புதன் கிழமை | 02.00 P.M. முதல் 03.00 P.M. |
| 6 | கடை எண்.10 பூங்காவிற்கு தெற்கு லாஸ்பேட்டை புதுச்சேரி | முதல் | 15.78 | 6000 | 12000 | 05.07.23 புதன் கிழமை | 03.00 P.M. முதல் 04.00 P.M. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 7 | கடை எண்.8 கிழக்கு முற்று லாஸ்பேட்டை புதுச்சேரி | தரை | 20.00 | 6300 | 12600 | 05.07.23 புதன் கிழமை | 04.00 P.M. முதல் 05.00 P.M. |
| 8 | கடை எண்.3 குரும்பாபேட் புதுச்சேரி | தரை | 7.65 | 3000 | 6000 | 05.07.23 புதன் கிழமை | 05.00 P.M. முதல் 06.00 P.M. |
| 9 | கடை எண்.14 இந்திரா நகர் கோரிமேடு புதுச்சேரி | தரை | 16.44 | 6000 | 12000 | 06.07.23 வியாழக் கிழமை | 10.00 A.M. முதல் 11.00 A.M. |
| 10 | தென்மேற்கு பகுதி வீட்டுவசதி வாரியம அலுவலக வளாகம், அண்ணா நகர் புதுச்சேரி | தரை | 16.00 | 9000 | 18000 | 06.07.23 வியாழக் கிழமை | 11.00 A.M. முதல் 12.00 Noon |
| 11 | தென் பகுதி வீட்டுவசதி வாரியம அலுவலக வளாகம், அண்ணா நகர் புதுச்சேரி | தரை | 8.17 | 5000 | 10000 | 06.07.23 வியாழக் கிழமை | 12.00 Noon முதல் 01.00 P.M. |
| 12 | கடை எண்.1 புளியன்கோட்டை சாலை, காரைக்கால் | தரை | 12.45 | 2500 | 5000 | 06.07.23 வியாழக் கிழமை | 01.00 P.M.. முதல் 02.00 P.M. |
| 13 | கடை எண்.3 புளியன்கோட்டை சாலை, காரைக்கால் | தரை | 12.45 | 2500 | 5000 | 06.07.23 வியாழக் கிழமை | 02.00 P.M. முதல் 03.00 P.M. |
| 14 | கடை எண்.5 புளியன்கோட்டை சாலை, காரைக்கால் | தரை | 7.80 | 1500 | 3000 | 06.07.23 வியாழக் கிழமை | 03.00 P.M. முதல் 04.00 P.M. |
| 15 | புதுச்சேரி வீட்டுவசதி வாரிய கிளை அலுவலகம், கோவில்பத்து காரைக்கால் | முதல் | 134.21 | 18000 | 36000 | 06.07.23 வியாழக் கிழமை | 04.00 P.M. முதல் 05.00 P.M. |
| 16 | HIG 3 இந்திரா நகர் வீட்டுவசதி வாரிய குடியிருப்பு கோரிமேடு புதுச்சேரி | முதல் | 90.00 | 9500 | 19000 | 06.07.23 வியாழக் கிழமை | 05.00 P.M. முதல் 06.00 P.M. |

2. ஏலத்தில் கலந்துகொள்ள விருப்பமுடையவர்கள் விண்ணப்பப்படிவ கட்டண தொகையான ரூ.525/- (ரூ.500 + GST 5%) மற்றும் செலுத்தப்படவேண்டிய டேவணித் தொகை ஆகிய இரண்டுக்கும் தனித்தனியாக தேசியமயமாக்கப்பட்ட ஏதேனும் ஒரு வங்கியில் "செயலர், புதுச்சேரி வீட்டுவசதி வாரியம், புதுச்சேரி" (The Secretary, Puducherry Housing Board, Puducherry) என்ற பெயரில் கேட்பு வரைவோலை

(Demand Draft) பெறவேண்டும்.அதற்குண்டான விண்ணப்பப்படிவத்தை http://py.gov.in மற்றும் https://eauction.gov.in என்ற இணையதளம் மூலம் 10.06.2023 முதல் பதிவிறக்கம் (download) செய்துகொள்ளலாம்.

3. ஒரு நபர் ஒன்றுக்கும் மேற்பட்ட கடை/அலுவலக வளாகம்/குடியிருப்பு-களுக்கு ஏலம் கேட்க விரும்பினால், தனித்தனி விண்ணப்பப்படிவம் மற்றும் அதற்குண்டான டேவணித்தொகையுடன் (EMD) ஏலத்தில் பங்குபெறவேண்டும்.

4. பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 03.07.2023 திங்கள்கிழமை மாலை 4.00 மணிக்குள் https://eauction.gov.in என்ற இணையதளம் மூலம் அனைத்து ஆவணங்களையும் அதாவது (விண்ணப்பப்படிவம், விண்ணப்ப கட்டணத்திற்கான கேட்பு வரைவோலை, டேவணித் தொகைக்கான கேட்பு வரைவோலை, ஆதார் அடையாள அட்டை நகல் மற்றும் வருமானவரி அடையாள அட்டை நகல் (PAN CARD) ஆகியவற்றை பதிவேற்றம் (Upload) செய்யவேண்டும். பூர்த்தி செய்து கையொப்பமிட்ட விண்ணப்பப்படிவத்துடன் மேற்சொன்ன அனைத்து ஆவணங்களையும் இணைத்து 03.07.2023 திங்கள்கிழமை மாலை 6.00 மணிக்குள் இவ்வாரியத்தின் டெண்டர் பெட்டியில் சமர்பிக்கப்படவேண்டும்.

5. டேவணித்தொகைக்கான (EMD) வரைவோலையை விண்ணப்பத்துடன் கட்டாயம் இணைத்து சமர்பிக்கப்படவேண்டிய கடைசி தேதி 03.07.2023 திங்கள்கிழமை மாலை 4.00 வரைமட்டுமே. இந்த காலகெடுவிற்கு முன்னதாக முன்வைப்புத்தொகையை செலுத்துபவர் மட்டுமே ஏலத்தில் கலந்துகொள்ள தகுதியானவர்கள்.

5.1 மின்-ஏலத்திற்கான கட்டாயத் தேவைகள்:

அ) விண்ணப்பதாரர் வருமான வரித்துறையின் செல்லுபடியாகும் நிரந்தர கணக்கு எண் (PAN) வைத்திருக்க வேண்டும்.

ஆ) விண்ணப்பதாரர் www.eauction.gov.in என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தில் ஆன்லைனில் பதிவு செய்திருக்க வேண்டும்.

இ) உத்தேசித்துள்ள விண்ணப்பதாரர்கள்/ஏலதாரர்கள் (DSC) டிஜிட்டல் கையொப்பச் சான்றிதழ் கொண்டிருக்க வேண்டும். DSC இல்லாமல், ஏலதாரர்கள் மின்னணு ஏலத்தில் பங்கேற்க முடியாது.

ஈ) விண்ணப்பதாரர்கள்/ஏலதாரர்கள் ஏலம் எடுக்கும்போது மின்சாரம் துண்டிக்கப்படுவது, இணையவழி தொடர்பு தடைபடுவது மற்றும் கணினி பழுது போன்ற தடைகளுக்கான மாற்று ஏற்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டும்.

குறிப்பு:

**விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள்/ஏலதாரர்கள் கடைசி நிமிட அவசரத்தைத் தவிர்க்க DSC பெறுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

6. மூன்று நாட்களுக்கு பிறகு ஏலத்தில் வெற்றிபெறாதவர்களின் முன்வைப்புத் தொகை திருப்பித்தரப்படும். ஏலத்தில் வெற்றிபெறுபவர்கள் (H.1) அவர்கள் செலுத்த வேண்டிய முழு தொகையில் (10 மாத வாடகையில்) டேவணித்தொகையை சரிசெய்து மீத தொகையை ஒதுக்கீட்டாணை அளித்த தேதியிலிருந்து இரண்டு நாட்களுக்குள் (48 மணி நேரத்திற்குள்) வாரியத்தில் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ள வேண்டும். அப்படி செலுத்த தவறும்பட்சத்தில் அவருடைய டேவணித்தொகைக்கான வரைவோலையை இழக்க நேரிடும். மேலும், தேவைப்பட்டால் வாரியம் அவருக்கு அடுத்தபடியாக அதிக தொகை குறிப்பிட்டிருந்த ஏலதாரருக்கு (H.2) தகவல் கொடுக்கப்பட்டு அவருக்கு வாய்ப்பு அளிக்கப்படும். தகவல் கொடுக்கப்பட்ட மூன்று தினங்களுக்குள் (72 மணி நேரத்திற்குள்) அந்த ஏலதாரர் (H.2) முழுத்தொகையையும் செலுத்த கடமைப்பட்டுள்ளார். அதுவரை அவரது டேவணித் தொகையை திருப்பித்தர இயலாது.

7. ஒவ்வொரு ஏல அதிகரிப்பும் ரூ.500/- மற்றும் அதற்கு மேற்பட்ட மடங்குகளில் இருக்கவேண்டும். அதிகபட்ச சதவீதம் தற்போதைய ஏலத்தொகையில் 90% மிகாமல் இருக்கவேண்டும்.

8. ஏலம் எடுத்தவர் கீழ்குத்தகைக்கு விடக்கூடாது.

9. ஏலம் சம்மந்தமான இதர விபரங்கள் அறிய விரும்புவோர் புதுச்சேரி அண்ணா நகரில் உள்ள புதுச்சேரி வீட்டுவசதி வாரிய அலுவலக வளர்ச்சி அதிகாரியை (Development Officer) அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் சந்தித்து அறிந்துகொள்ளலாம்.

10. அதிகபட்ச ஏலக்கேட்பு தொகையில் பத்துமடங்கு தொகையை செலுத்திய தேதியிலிருந்து பதினோரு மாதத்திற்கு கடை/அலுவலக/குடியிருப்பு போன்றவற்றை நடத்துவதற்கு உரிமம் வழங்கப்படும்.

11. மேற்படி ஏலத்தை ஏற்றுக்கொள்ளவோ, ரத்து செய்யவோ அல்லது ஏலத்தில் மாற்றம் செயயவோ வீட்டுவசதி வாரிய செயலருக்கு முழு உரிமை உண்டு.

12. மின்னணு ஏலம் தொடர்பான பயிற்சி புதுச்சேரி தலைமைச் செயலகத்தின் மூன்றாவது தளத்தில் உள்ள e-procurement Cell-ல் ஏலத்தில் பங்குபெறுவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.

செயலர்
புதுச்சேரி வீட்டுவசதி வாரியம்